தினமலர் 17/09/2019

# உயர் கல்வி தர வழிகாட்டி 167 கல்லூரிகள் தேர்வு

திருப்பூர், செப். 17–

நாட்டில், 3.6 கோடி மாணவர்கள், உயர் கல்வி படிக்கின்றனர். உயர் கல்வியில் உயரிய தரம் மற்றும் ஆராய்ச்சி மாண வர்களை அதிகளவில் உரு வாக்குவதை நோக்கமாக கொண்டு, பல்கலை மானி யக்குழு(யு.ஜி.சி.,), 'பர மார்ஷ்' என்ற திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

தேசிய மதிப்பீடு மற் றும் தரச்சான்று கவுன்சி லின்(நாக்) தர மதிப்பீடு '3.26/4' பெற்ற உயர் கல்வி நிறுவனங்களை வழிகாட்டியாக கொண்டு, ஐந்து உயர் கல்வி நிறுவ னங்களை 'நாக்' அங்கீகா ரம் பெற செய்வதற்கான திட்டமாக இது இருக்கும்.

அறிவு, தகவல், வாய்ப் புகளைப் பகிர்ந்து கொள் ளுதல், ஆராய்ச்சித்தரம், கற்றல் மற்றும் கற்பித் தல் தரத்தை உயர்த்துதல் போன்ற உதவிகளை, வழி காட்டு நிறுவனம் மேற் கொள்ளும்.

வழிகாட்டு நிறுவன மாக செயல்பட, நாடு முழுவதும் உள்ள, 167 உயர் கல்வி நிறுவனங்கள் (கல்லூரிகள்) தேர்வு செய் யப்பட்டுள்ளன. இதில், தமிழகத்தைச் சேர்ந்த கல் லூரிகளும்,இடம்பெற்றிருக் கின்றன. வழிகாட்டுதல் பெற, 700க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் யு.ஜி.சி., யிடம் விண்ணப்பித்துள் ளன. இந்த எண்ணிக் கையை மேலும் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

'சர்வதேச நாடுகளுடன் ஒப்பிடுகையில், முன்பு இருந்த ஆராய்ச்சித்தரம், நாட்டில் குறைந்து வரு கிறது. இதை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள், இத்திட் டம் மூலம் மேம்படுத்த முடியும்' என்று, கல்வியா ளர்கள் கூறுகின்றனர்.